# THE JEWEL

DEC 16 to JAN 15, 2024

*Bulletin of*

# LIONS CLUB OF SIVAKASI

Vol : 7



**Editor** : Lion Deepa Lakshmi Sudhakaran
**Address** : 641, Gnanagiri Road, Sivakasi.
**Phone** : 94875 91369
**Email** : editor.lionsclubofsivakasi@gmail.com



**Lion K.Prabakar**
*President*
98949 95884
president@lionsclubofsivakasi.com



**Lion P.Nithyapandi**
*Secretary*
94431 69876
secretary@lionsclubofsivakasi.com



**Lion P.Sudhakaran**
*Treasurer*
94433 31369
treasurer@lionsclubofsivakasi.com

**Associate Editors 2023 - 24**



**Lion**
**MJF P.Vinoth Kanna**



**Lion**
**M.Raddhikadevi**



**Lion**
**S.Bhavani**



**Lion**
**Amirtha Priya**

**Slogan : Deserve, Fight for Right**

**Theme : Touch the Heart by Service**

# Lions Club of Sivakasi Surpassing 62nd Year 1961 - 2023

| | | |
|---|---|---|
| Multiple District | : | 324 |
| District | : | 324 A |
| Region | : | Raja Rajan |
| Zone | : | Vilvam |
| Club No | : | 26504 |
| Inaugurated on | : | 09-05-1961 |
| Charterd on | : | 19-05-1961 |
| Total Members | : | 225 |
| Charter Member | : | 1 |
| MJFs & PMJFs | : | 28 & 3 |
| Meeting Days | : | I, II, IV Wednesday |
| Meeting Venue | : | Sivakasi Lions Junior School Palaniandavarpuram Colony, Sivakasi. |
| Permanent Project | : | The Sivakasi Lions Mat.School, Sivakasi. Bus Shelters, Children's Park, Blood Separation Unit, Blood Storage D.Freezer, ICU Ward & Washing Plant at Sivakasi G.H., Library and sewing machine centre in Burma Colony. |

# Table of Contents


- PST's Report 4
- Editor Report 11
- International President Message 12
- Lions International Convention 13
- Rose Parade 15
- Melvin Jones Birthday 17
- Photo Contest Result 18
- 324-A District News 21
- Real Reformer Passion NK.Viswanathan PMJF 25
- December Meeting 28
- January Meeting 35
- Special Medical Camp 37
- Sivakasi Green Forum 40
- Lions Star 43
- Cover Story 44
- Unveiling School Activities 46
- Cherishing the moments of our members 50
- Greetings 52

# தலைவர் உரை



அனைவருக்கும் வணக்கங்கள்,

நாங்கள் பதவியேற்று ஆறு மாதங்கள் முடிந்து விட்டது. நிறைய இனிய அனுபவங்கள், சேவைத் திட்டங்களைச் செய்யும் போது கிடைக்கும் மன நிறைவு வார்த்தைகளால் சொல்ல முடியாது.

நமது உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நமது சங்கம் முதன்மையில் இருக்கவும், நாங்கள் சேவைத் திட்டங்களைச் சிறப்பாகச் செய்வதற்கும் எங்களுக்கு ஆதரவாகவும், எங்களுடன் இருந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். அடுத்து வரும் மாதங்களிலும் நாங்கள் சிறப்பாக செயல்பட, நிறைய சேவைத் திட்டங்கள் செய்ய எங்களுடன் இருந்து செயல்படுத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

**Scan QR Code for**

**Club Website**

இந்த Q.R.Code-ஐ ஸ்கேன் செய்து நமது சங்கத்தின் இணையதள முகவரிக்குள் சென்று நமது சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் சேவைகளைக் காணலாம்.

Website - www.lionsclubofsivakasi.com

Face book Id - Lions Club of Sivakasi

**Lion K.Prabakar**
*President*

# செயலாளர் அறிக்கை

*Lion P.Nithyapandi*



அனைவருக்கும் வணக்கம்,

நமது சங்கத்தின் ஏழாவது மாத இதழ் வழியாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. டிசம்பர் 16 முதல் ஜனவரி 15 வரை நமது சங்கத்தின் செயல்பாடுகளும், சேவைகளும், சிறப்பாக நடைபெற்றது.

சேவைகளில் பங்கு பெற்று நிதியுதவி அளித்த உறுப்பினர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

17-12-2023 அன்று நட்டலத்தில் வைத்து நடைபெற்ற ஷாஜகான் மண்டல மாநாட்டில் நமது சங்க உறுப்பினர்கள் 10 பேர் கலந்து கொண்டோம்.

19-12-2023 அன்று second zone advisory meeting and zone inter club meeting நடைபெற்றது. லயன்ஸ் கிளப் ஆப் சிவகாசி முத்து சிதறல் மற்றும் சிவகாசி பர்பைக்ட் கிங்ஸ் சங்கம் நடத்தினார்கள்.

27-12-2023 அன்று டிசம்பர் மாத இரண்டாவது பொதுக்குழுக் கூட்டம், நமது சங்கத்தின் முன்னாள் முத்தலைவர்களை கௌரவிக்கும் விழாவாக நடைபெற்றது. 324 கூட்டு மாவட்டத்தின் சேர்மன், PMJF லயன் K.R.முத்தையா (ஈரோடு யூனிக்) அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நமது சங்கத்தின் சேவைகளாக கல்வி உதவித்தொகை, மரக்கன்றுகள், அரிசிப்பைகள், வடமலாபுரம் அரசு மருத்துவமனைக்கு சேர், டியூப் லைட், பள்ளி மாணவருக்கு சைக்கிள், ஆதரவற்றவருக்கு போர்வை, வேஷ்டி, சட்டை வழங்கப்பட்டது.

03.01.2024 அன்று ஏழாவது செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

07.01.2024 அன்று அருப்புக்கோட்டையில் வைத்து நடைபெற்ற கிருபாராஜா மண்டல மாநாட்டில் நமது உறுப்பினர்கள் 10 பேர் கலந்து கொண்டோம்.

10.01.2024 அன்று ஜனவரி மாதத்தின் முதல் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக திரு.செந்தில்குமார் (லவ்லி ஆப்செட் உரிமையாளர்) அவர்கள் பசுமை மன்றத்தின் செயல் திட்டங்கள், சிவகாசியின் நீர் வளத்தை எவ்வாறு உயர்த்தியுள்ளது என்பதைப் பற்றி சிறப்புரையாற்றினார்.

12.01.2024 அன்று லயன்ஸ் சீனியர் பள்ளியில் வைத்து sports day நடைபெற்றது.

## சேவைகள்

16.12.2023 அன்று சிவகாசியில் நடைபெற்ற மாற்றுதிறனாளிகள் தின விழாவில் மாற்றுத்திறனாளிகளின் நலத்திட்டத்திற்காக லயன் A.ஆசைத்தம்பி அவர்கள் ரூ.10,000/- நன்கொடை வழங்கினார்.

16.12.2023 முதல் 15.01.2021 வரை பசிக்கு உணவு திட்டத்தின் மூலம் தினமும் 10 நபர்களுக்கு மேகலா பல் மருத்துவமனையில் வைத்து உணவு வழங்கப்பட்டது. இதற்கு MJF லயன் S.வாசியப்பன், லயன் நளினி அசோகன், MJF லயன் P.வினோத்கண்ணா ஆகியோர்கள் நன்கொடை வழங்கினார்கள்.

16.12.2023, 27.12.2023, 29.12.2023 ஆகிய தினங்களில் ஜீவக்கல் காப்பகத்திற்கு தேவையான முட்டை வழங்கப்பட்டது.

17.12.2023 அன்று லயன் சுதிர் அவர்கள் ஒரு யூனிட் ரத்தம் தானம் வழங்கினார்.

28.12.2023 அன்று தூத்துக்குடி மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான பலசரக்கு மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள், சேலை, தலையணை,

போர்வைகள், குழந்தைகளுக்கு தேவையான துணிகள், நமது சங்கத்தின் சார்பாக வழங்கப்பட்டது.

02.01.2024 அன்று வள்ளலார் இல்லத்திற்கும், ஜீவக்கல் காப்பகத்திற்கும், சிபியோ உண்டு உறைவிட பள்ளிக்கும் ஒரு மாத தேவைக்கான பலசரக்கு சாமான்கள் வழங்கப்பட்டது. மேலும் வள்ளலார் இல்லத்தில் உள்ள முதியவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. ஜீவக்கல் காப்பகத்தில் உள்ள குழந்தைகளுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

05.01.2024 அன்று, லயன் T.இம்பாலா அவர்கள், சரஸ்வதி என்ற மூதாட்டிக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்ய மருத்துவ உதவித்தொகை அளித்தார்.

10.1.2024 அன்று லயன் கோதை செந்தில் வேலவன் லதா என்ற பெண்ணுக்கு அரிசிப்பை வழங்கினார்.

மருத்துவ முகாம்

| தேதி | பள்ளியின் பெயர் | பயனடைந்தோர் |
|---|---|---|
| 05.01.2024 | SNM மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி | 175 |
| 07.01.2024 | அண்ணாமலைநாடார்-உண்ணாமலைஅம்மாள் மேல்நிலைப்பள்ளி | 225 |
| 08.01.2024 | SHNV பெண்கள் மேல்நிலைப்பள்ளி | 140 |
| 10.01.2024 | AVT மேல்நிலைப்பள்ளி | 140 |
| 12.01.2024 | நாரணாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி | 145 |








மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை



தூத்துக்குடி வெள்ள நிவாரணம்



இரத்ததானம்



அரிசிப்பை வழங்குதல்






பலசரக்குப் பொருட்கள் வழங்குதல்





மதிய உணவு வழங்குதல்



*Touch the Heart by Service*

# On Going Projects



*From Blueprints to Reality : International Lions School Visual Progress.*





*Watering Wellness in G.H.*
*Browse Through Our Hospital Drinking water Tap Project Photos.*





*Witness the Transformation of Waiting Areas for pregnant women in G.H.*

# பொருளாளர் அறிக்கை

*Lion P.Sudhakaran*



சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்,

ஜனவரி மாதத்திற்கான நமது சங்கத்தின் நிதி நிலையை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த வருடம் Lions Club International, குடும்ப உறுப்பினர்களுக்கு ஓட்டு உரிமத்தை ரத்த செய்தது. நமது சங்க குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் தனித்தனி உறுப்பினர்களாக மாற்றி அமைக்க விண்ணப்பித்தோம். அதன்படி நமது அனைத்து குடும்ப உறுப்பினர்களையும் தனி உறுப்பினர்களாக மாற்றப்பட்டு, அதற்கான கூடுதல் International Dues-யையும் கட்டி விட்டோம் என்பதை இதன்மூலம் தெரியப் படுத்துகின்றேன்.

குடும்ப உறுப்பினர்கள் 11 மற்றும் தனி உறுப்பினர்கள் 6 நபர்கள் போக மீதமுள்ள அனைத்து உறுப்பினர்களிடம் இருந்து சந்தா பெறப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## Our Club Service Report in MY LION App Till January 15, 2024

| People Served | Service Activities Completed | Volunteer Hours | Funds Donated (USD) | Funds Raised (USD) |
|---|---|---|---|---|
| 76.5K | 485 | 21.3K | $128.5K | $128.1K |

# EDITOR'S REPORT

*Lion Deepa Lakshmi Sudhakaran*



Dear Members,

It is with immense pleasure, that I present this 7th issue of our bulletin, which captures the essence of our club's vibrant activities and impactful services. We have dedicated sections to highlight the contributions and milestones of our club members, and PST month celebration meeting with the distinguished presence of 324 MD Chairman PMJF Lion K.R.Muthiah.

As we flip through the pages of the book, it serves as a source of pride and inspiration, reminding us of the positive impact of our Lions club continues to make.

**A short lesson,**

A person graduated at the age of 22, but waited 5 yrs for a good job, someone become a CEO at 25 and died at 50, while another became a CEO at 50 and lived for 90 yrs. A person is still single, while someone from his school group has become grandfather. Obama retired at 55 and Trump started at 70,

People around you might seem ahead of you and some might seem to be behind of you.

Do not envy others, they are running on their own race in their own time zone and you are in yours. so relax

You're not late, you're not early you're very much on time, achieve your desired goals for life.

# INTERNATIONAL PRESIDENT MESSAGE



Dear Lions,

As a Lion, you proudly serve every day in so many ways. While you're busy making a local impact, It's important to remember that you are also part of a powerful global network of Volunteers committed to making our communities and our world a better place. Together, we are changing lives by one service project at a time.

Even though we serve in our own corners of the world, the beauty of being a Lion is that we are all guided by the same mission and are continually inspired by one another. See for yourself how you are part of something bigger. Read our impact stories and watch our service videos. Then be sure to share your own. Report your service so the world can see the impact you are making. If you want to fully immerse yourself in the world of Lions, join us on June 21-25 in Melbourne, Australia for our International Convention.

There is no greater feeling than joining together to give our time and our talents to help those in need. Thank you for your commitment in creating the change that empowers others to achieve their potential. Once again, I thank you for proudly showing the world what it means to be a Lion.

*"We are stronger together"*

Yours in service

*Dr. Patti Hill*

# *Lions International Convention.*

Lions International has held more than 100 convention since 1917. The first convention was held at Dallas, Texas. Once a year thousands of Lions and Leos from around the world come together at our Lions International Convention. It is the premier event of the year.

**106$^{th}$ International Convention** is going to take place at Melbourne from June 21-25 (2024). Melbourne is known as the cultural capital of Australia. Admire the beauty of Australia, Phillip Island where you can watch penguins come ashore at sunset, can feed Kangaroes and wallabies, pet koalas and see wombats, dingoes and other exotic Australian species. You can enjoy a variety of culinary delights, browse unique out door shopping and many other attractions.




Everyone benefits by attending the biggest Lion event of the year.

1. You can connect with Lions and Leos from all over the World and build friendship that last a life time.

2. Discover new service ideas for the projects in your own communities.

3. Celebrate our new International officers and the preliminary results for next year's international president and vice presidents at the closing plenary session.

4. Lions International leaders and staff will host a variety of innovative and informative seminars to inspire your service.

5. There is an outstanding exhibitor booths where you Lions can shop.

6. Meet Melvin Jones Fellows and Lion leaders, enjoy the award presentation and bring your appetite to this luncheon.

7. Lions and Leos showcase their heritage and their pride as they march together through the streets in colourful costumes.

**Future Host Locations:**

- **July 4-8, 2025 : Mexico City, Mexico:** It is the historic city with 6000 miles of Coast line, the worlds most vibrant music scene and 187 archaeological sites.
- **From July 3-7; 2026 : Atlanta, Georgia, USA :** From arts and culture to music and Cuisine, Atlanta is full of multicultural opportunities for everyone.
- **July 2-6, 2027 : Wahington, D.C., USA :** It is a world class destination complete with breathtaking views and unique venues. There is no shortage of entertainment.
- **June 23-27, 2028: Singapore:** This amazing city-state and island Country offers a fantasy Merlion as its symbol, nature parks and the worlds first night zoo / safari. The 110th annual convention is not to be missed.
- **June 29 - July 3, 2029 : Minneapolis, USA :** Known as the land of 10,000 lakes. The world famous Mall of America (largest shopping mall in USA) is just 15 min from downtown.

# Rose Parade

The Rose Parade, also known as the Tournament of Roses is an annual parade held mostly along colorado Boulevard in Pasadena, California, U.S on new years day. More than 45 floats from all over the country will participate in the Rose Parade, each competing to win awards.

Lion's first displayed a float in the 1948 Rose Parade. Since 1992, Lions Clubs International has continuously presented a float.

Two of our Lions entries (1993 & 1994) won awards for the most beautiful float. The 2014 float received the special trophy for excemptional merit in multiple classifications.

Each year LCI's President and 1$^{st}$ Lady ride the float in the parade. The theme of this years parade is "Celebrating a world of music : The universal language". Embarking on a 5½ miles Parade, Lions International is proud to show case their float "Changing the world through music", mirroring the tournament of roses 2024 theme of musical harmony and celebrating the world of music.

The ensemble of musical instruments showcases a violin, sitar, Alfaia drum, trumpet and piano representing instruments commonly played in more than 200 countries where Lions and leos serve. At the forefront of the Float lies giant multicoloured keys and microphone.

The focal point of the 35-foot float earth adorned in headphone representing that Lions are always listening to the needs of the world. Creating a symphony starts with a single note, then another and another, until you have a

master piece, similarly Lions are changing the world through every humanitarian service project and each act of kindness we make every day, no matter how big or small.




**Model of the float**




IP Dr.Patti Hill with her husband Greg Holmes in the float




Float in the Parade

# லயன்ஸ் சங்க நிறுவனர் மெல்வின் ஜோன்ஸ்




**பிறந்த தினம் :** உலகம் முழுவதும் கிளை பரப்பி தொண்டும் தோழமையும் ஆற்றி வரும் சர்வதேச லயன்ஸ் சங்கத்தின் நிறுவனர் மெல்வின் ஜோன் அவர்களின் 145-வது பிறந்த தினம் ஜனவரி,13-ல் கொண்டாடப்படுகின்றது.

அமெரிக்காவின் அரிசோனா மாநிலம் ஃபோர்ட் தாமஸ் நகரில் (1879) பிறந்தார். இவரது தந்தை ராணுவ கேப்டன். கல்லூரிப் படிப்பை முடித்த மெல்வின், சிகாகோவில் 1913-ல் சொந்தமாக காப்பீடு ஏஜென்ஸியைத் தொடங்கினார்.

விரைவில் வெற்றிகரமான தொழிலதியராக உருவான போது வணிக வளர்ச்சி குறித்து கருத்து பரிமாற்றம் செய்ய செயல்பட்ட அமைப்பின் (பிசினஸ் சர்க்கிள்) செயலாளர் ஆனார்.



Melvin Jones memorial at his birth place in Fort Thomas Arizona

1961-ல் வணிக வட்டத்தின் இயக்குநர்கள் கூட்டத்தில் “சங்கம் தன் குறுகிய வட்டத்தில் இருந்து வெளியே வந்து சமுதாயத்துக்கும் ஏழை மக்களுக்கும் தொண்டாற்ற வேண்டும்.” என்ற கருத்தை எடுத்துக் கூறினார். இதை அனைவரும் ஏற்றுக் கொண்டு அரிமா சங்கத்தின் அடித்தளம் அமைத்தார்கள். அமெரிக்கா முழுவதும் இதுபோல பல வணிக வட்டங்கள் இயங்கி வந்தன. அவை ஒருங்கிணைந்து உயர்ந்த

இலக்கை நோக்கி பாடுபட வேண்டும் என்று அனைத்து சங்கங்களுக்கும். தொடர்ந்து கடிதம் எழுதினார்.

இவரது தொடர் முயற்சியால் 1917 ஜுன் 7-ம் தேதி நாடு முழுவதும் உள்ள அனைத்து வர்த்தக வட்டங்கள் இணைந்து ஒரு கூட்டம் நடத்தியது. அனைத்து வட்டங்களும் ஒருங்கிணைந்து "லயன்ஸ் கிளப்" என்ற பெயரில் செயல்படத் துவங்கியது. இதன் செயலாளராக மெல்வின் தேர்ந்தெடுக்கப் பட்டார். இந்த அமைப்புக்கென சட்ட திட்டங்கள், கொள்கைகள், கோட்பாடுகள் வகுக்கப்பட்டன. கனடாவில் 1920-ல் ஒரு கிளை தொடங்கப்பட்டது. வெகு வெகமாக உலகெங்கும் பரந்து விரிந்து பன்னாட்டு இயக்கமாக மலர்ந்தது.

1926-ல் தனது காப்பீட்டு தொழிலை விட்டுவிட்டு அரிமா சங்கத்தில் முழு நேரமும். ஈடுபட்டு சங்கத்தின் வளர்ச்சியை பல மடங்கு அதிகரித்தார். சர்வதேச அரிமா சங்ககத்தின் ஆயுட்கால பொதுச் செயலாளர் பதவியை நிர்வாகக்குழு இவருக்கு வழங்கியது. தன் வாழ்நாள் இறுதிவரை தொண்டாற்றியவர் தன்னுடைய 82-வது வயதில் (1961) மறைந்தார்.

அவருடைய தனிப்பட்ட பொன்மொழியான "நீங்கள் வேறொருவருக்காக ஏதாவது செய்யத் தொடங்கும் வரை உங்களால் வெகுதூரம் செல்ல முடியாது" - உலகெங்கிலும் உள்ள பொது ஆர்வமுள்ள மக்களுக்கு வழிகாட்டும் கொள்கையாக மாறியது. அவர் நம்முடன் இல்லை என்றாலும் சேவை செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் முழுமையாக வாழும் மில்லியன் கணக்கான அர்ப்பணிப்புள்ள சிங்கங்களுடன் அவர் எப்போதும் இருக்கின்றார்.

## Melvin Jones Photo contest result

*(Snap a picture of what it means to be a Lion or Leo.)*

Eight winners are announced, one from each constitutional area (CA) All are awarded in the 106th international convention in Melbourne, Australia.







Prevention of childhood blindness







Serving the youth, through serving community




Serving lives means changing lives











# Birthday wishes to Prominent Trialblazers




Warmest Birthday wishes to our esteemed International President, Dr.Patti Hill, whose theme of 'Changing The World' has ignited a spirit of Positive transformation. She is from Edmonton Alberta, Canada is a president of a Consulting firm. With 30 years of experience as an educator and psychologist in training. A member of the Edmonton Host Lions club since 1990. She has received numerous awards, including several International President's awards. She has been honored with the Ambassador of Good will award, the highest honor, the association bestows upon its members.

---

We extend our heartfelt wishes to our second International Vice President Lion A.P.Singh, from Lions club of Calcutta vikas in Dist 322 B1. He has been shining all these years as an orator, visionary leader, motivator and a passionate guide. He is a beacon of leadership and inspiration to all.



# 324-A மாவட்ட செய்திகள்






தூத்துக்குடி மாவட்டத்தில் வரலாறு காணாத மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தனது வாழ்வாதாரத்தை இழந்த பல்வேறு குடும்பங்களுக்கு பல்வேறு சேவைகளாக உணவு, போர்வை, பிஸ்கட், அரிசிப் பை, பால் பவுடர் போன்றவற்றை நமது மாவட்ட சங்கங்கள் சிறப்பாக வழங்கியது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்ய, நமது ஆளுநர் லயன்ஸ் இன்டர்நேஷனலிடம் தொடர்பு கொண்டு நிதி வழங்க வேண்டுகோள் விடுத்ததால் பன்னாட்டு நிதி 10,000 டாலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




17-12-2023 அன்று ஷாஜகான் மண்டல மாநாடு கன்னியாகுமரி மாவட்டத்தில் நட்டலத்தில் (கன்னியாகுமரி) வைத்து நடைபெற்றது.




07.01.2024 அன்று கிருபா ராஜா மண்டல மாநாடு அருப்புக்கோட்டையில் வைத்து நடைபெற்றது.




10.01.2024 அன்று நான்குநேரி லயன்ஸ் கட்டிடத்தில் வைத்து தொழில் முன்னேற்றத்திற்கான பயிற்சி நடைபெற்றது.



Touch the Heart by Service







மாவட்ட அளவில் புத்தாண்டு விழா, நமது நிறுவனர் மெல்வின் ஜோன்ஸ் பிறந்த நாள் மற்றும் பொங்கல் விழா என முப்பெரும் விழா 13.04.2024 அன்று கோவில்பட்டி சௌபாக்யா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.



19.12.2023 அன்று Second Zone Advisory Meeting and Zone Inter Club Meeting நடைபெற்றது.

# LIONS INTERNATIONAL

DIST - 324 A 2023 - 24

## REGION - RAJA RAJAN

### HALF YEARLY SERVICE ACTIVITIES REPORT

TOTAL SERVICE ACTIVITIES : 1413 TOTAL BENEFICIARIES : 122649 TOTAL AMOUNT : 18276872

**ZONE : COCONUT TREE / ZONE CHAIRPERSON - Ln. P.K. SUBBIAH**

| CLUB NAME | TOTAL AMOUNT | TOTAL SERVICE ACTIVITIES | TOTAL BENEFICIARIES |
|---|---|---|---|
| LIONS CLUB OF WATRAP | 263000 | 15 | 1245 |
| LIONS CLUB OF RAJAPALAYAM | 572700 | 27 | 1377 |
| LIONS CLUB OF RAJAPALAYAM TOWN | 1134670 | 65 | 2191 |
| LIONS CLUB OF MEENAKSHIPURAM CENTENNIAL | 211730 | 7 | 273 |
| LIONS CLUB OF MALLI PEARLS | 126400 | 8 | 313 |
| LIONS CLUB OF VIRUDHUNAGAR PERFECT KINGS | 115700 | 5 | 225 |

**ZONE : JACKFRUIT TREE / ZONE CHAIRPERSON - Ln. G. RAMALINGAM**

| CLUB NAME | TOTAL AMOUNT | TOTAL SERVICE ACTIVITIES | TOTAL BENEFICIARIES |
|---|---|---|---|
| LIONS CLUB OF SIVAKASI INDUSTRIAL TOWN | 3020200 | 447 | 21472 |
| LIONS CLUB OF SIVAKASI METRO | 117995 | 14 | 385 |
| LIONS CLUB OF VIRUDHUNAGAR BUSI TOWN | 37743 | 32 | 286 |
| LIONS CLUB OF SIVAKASI JOYSTAR | 40600 | 13 | 355 |
| LIONS CLUB OF VEMBAKOTTAI PASSION | | | |

**ZONE : KHEJRI TREE / ZONE CHAIRPERSON - Ln. I. KUMARAVEL RAJAN**

| | TOTAL AMOUNT | TOTAL SERVICE ACTIVITIES | TOTAL BENEFICIARIES |
|---|---|---|---|
| LIONS CLUB OF VIRUDHUNAGAR | 310000 | 11 | 475 |
| LIONS CLUB OF SRIVILLIPUTTUR | 912000 | 221 | 15807 |
| LIONS CLUB OF THIRUTHANGAL | 367000 | 21 | 1370 |
| LIONS CLUB OF SIVAKASI CENTRAL | 162100 | 9 | 288 |

**ZONE : VILVAM TREE / ZONE CHAIRPERSON - Ln. M. STEPHEN Mjf**

| | TOTAL AMOUNT | TOTAL SERVICE ACTIVITIES | TOTAL BENEFICIARIES |
|---|---|---|---|
| LIONS CLUB OF SIVAKASI PEARLS SPARK | 40753 | 10 | 153 |
| **LIONS CLUB OF SIVAKASI** | **10608811** | **461** | **74638** |
| LIONS CLUB OF SIVAKASI COSMOS | 137531 | 25 | 400 |
| LIONS CLUB OF KOVILPATTI DYNAMIC | 62000 | 13 | 320 |
| LIONS CLUB OF SIVAKASI PERFECT KINGS | 35939 | 3 | 1076 |

* Service Activities Details taken into account shown in my lion.

## REAL REFORMER Passion Lion Dr.N.K.VISWANATHAN PMJF



2022-23ம் ஆண்டில் 324-A மாவட்டத்தின் மிகப்பெரிய சாதனைக்கு கிடைத்த அங்கீகாரம். கடந்த ஆண்டு நமது மாவட்டத்தின் மூலம் LCIF நிதி செலுத்தப்பட்டது. உலகம் முழுவதும் லயன்ஸ் தலைமையிலான திட்டங்களுக்கு LCIF நிதியளிக்க உதவியது, அதை பாராட்டும் வகையில் LCIF Chairperson Medal நமது மாவட்டத்திற்கு கிடைத்துள்ளது. இது என்னுடைய வெற்றி அல்ல, நம்முடைய வெற்றி.

**GOVERNOR PERIOD NOTABLE ACHIEVEMENTS 2022-2023**

01. பசிக்கு உணவு (Signature Project)
02. 40 Zone Chairpersons Conducted Zone Schooling Individually.
03. 10 RC 40 ZC 3 days Residential Schooling at Hotel Germanus, Kodaikanal.
04. IT Team 11 Members were given Schooling. (First time in our District)
05. DFDI Training given to 40 Members. (First time in our District)
06. Cabinet Installation Registration 1894 (Registration Closed before 7 days) (First time in our District)
07. All Clubs Submitted PU101 before May 15. (First time in our District)
08. 2 DLLI Programs Conducted. (First time in our District)
09. 100% WMMR & WSAR (First time in our District)
10. Paperless Communication (First time in our District)
11. Introduced District Website, Facebook page and YouTube channel (First time in our District)
12. District Directory & District Pin distributed for all members in district on cabinet installation day.

13. 162 clubs conducted Peace Poster Contest. (First time in our District)
14. New Members Added : 1863
15. New Clubs : 11
16. New Leo Clubs : 5
17. District Convention Registration : 1534 (Registration Closed before 15 days) (First time in our District)
18. MJF/PMJF: 137 (S1,37,591.15) (Rs.1, 14,20,000/-) (First time in our District)
19. District Educational Fund: Rs.5,40,000/- (First time in our District)
20. Digital District Convention was conducted with barcode scanning (First time in our Multiple)
21. Passion District Awards Function - 549 Awards. (First time in our District)

**MULTIPLE DISTRICT AWARDS :**

01. District Directory: 2 Prize
02. District Pin: 3 Prize
03. 1st Council Meeting Multiple District Presentation Award: 1 Prize
04. 2nd Council Meeting Multiple District Presentation Award: 2 Prize (First time in our District)
05. 3rd Council Meeting Multiple District Presentation Award: 2 Prize
06. 4th Council Meeting Multiple District Presentation Award: 1 Prize
07. Multiple District 1st Quarterly Award: 3 Prize
08. Multiple District 2nd Quarterly Award: 1st Prize
09. Multiple District 3rd Quarterly Award: 2nd Prize
10. Multiple District 4th Quarterly Award: 1st Prize
11. Multiple District Awards in 26 Categories

**ISAME AWARDS :**

01. ISAME Strong Finish Charter Challenge Award
02. ISAME GAT Zone Chairperson Award
03. ISAME GAT Appreciation Award for 10 Clubs (First time in our District)

04. ISAME GAT Champion Club President Award for 2 clubs

**INTERNATIONAL AWARDS.**

01. International President Award for adding 200 members in the given period of time.
02. Honoured with International President medal for a successful year.
03. Club Excellence Award for 90 Clubs.
04. Zone Chairperson Excellence Award - 32
05. Region Chairperson Excellence Award - 10
06. Leadership Medal - 3
07. Presidential Medal - 3

SVDG Period TA 40000 Donated to Karingal Aged Home

FVDG Period TA 40000 Donated to Alex Kailasam Aged Home

Real Reformer

PMJF Passion Lion Dr.N.K.VISWANATHAN

324 Multiple District No 1 Governer 2022

(Overall Performance)

# 51ST ISAME FORUM




More than 800 delegates from India, Srilanka, Nepal, Pakistan, the middle East and Africa and 350 delegates from Bangladesh attended the event.

# பொதுக்குழுக் கூட்டம் (டிசம்பர்)

***Lion Devi Nithya Pandi***



டிசம்பர் மாதத்தின் இரண்டாவது பொதுக் குழுக் கூட்டம் 27.12.2023 அன்று, நமது சங்கத்தை சிறப்பாக வழி நடத்தி, உன்னத சேவைகள் செய்த முன்னாள் முத்தலைவர்களின் தலைமைத்துவத்தை கௌரவித்து, பாராட்டி கொண்டாடும் விழாவாக நடைபெற்றது.

அன்றைய சிறப்பு விருந்தினர் நமது 324 கூட்டு மாவட்டத்தின் சேர்மன் PMJF லயன் K.R.முத்தையா (லயன்ஸ் கிளப் ஆய் ஈரோடு யூனிக்) அவர்கள் வருகை புரிந்தார். காலை 11.30 மணியளவில நமது சீனியர் லயன்ஸ் பள்ளிக்கு வருகை புரிந்தார். நமது சங்க உறுப்பினர்களோடு சேர்ந்து, பள்ளியையும் அரசு மருத்துவமனையில் நாம் செய்த நிரந்தர சேவைகளையும் பார்வையிட்டார்.

இரவு 7 மணிக்கு லயன் ரேணுகா தேவி முத்துக்குமரனின் tail twister விளையாட்டுடன். கூட்டம் ஆரம்பமானது. லயன் K.R.முத்தையா PMJF மற்றும் அவரது துணைவியார் லயன் சாந்தி முத்தையா அவர்களை லயன் K.முருகையன் மற்றும் லயன் ராதிகாதேவி முருகையன் பொன்னாடை அணிவித்து மேடைக்கு அழைத்து வந்தார்கள்.

கொடி வணக்கத்தை லயன் கோகிலா விஜயகுமார் அவர்களும், அரிமா பிராத்தனையை லயன் அமுதா சிவபிரான் அவர்களும் வாசித்தார்கள். உலக அமைதிக்காக ஒரு நிமிடம் மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது.

தலைவர் லயன் K.பிரபாகர் தன்னுடைய வரவேற்புரையில், 324 கூட்டு மாவட்டத்தில் A, B, C, D, E, F, G, H, I, J, K, L, M, N என 14 மாவட்டங்கள் அடங்கும். மொத்தம் 1750 சங்கங்களும் இதில் 75,000 உறுப்பினர்களும் உள்ளனர். இந்த 14 மாவட்டத்தின் சேர்மன்தான் லயன் K.R.முத்தையா PMJF அவர்கள். இவ்வளவு பெரிய பதவி

வகிக்கும் நமது சேர்மன் அவர்களின் முன்னிலையில் நமது முன்னாள் முத்தலைவர்களை கௌரவிப்பது என்பது மிகவும் பெருமைக்குரியது என்றார்.

செயலாளர் லயன் P.நித்தியபாண்டி டிசம்பர் மாதத்தில் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் சேவைத் திட்டங்களைப் பற்றிக் கூறினார்.

சிறப்பு விருந்தினர் PMJF லயன் K.R.முத்தையா அவர்களை லயன் M.ராமமூர்த்தி அவர்கள் சபைக்கு அறிமுகம் செய்து வைத்தார். சிறப்பு விருந்தினர் தன்னுடைய உரையில் நமது சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் சேவைத் திட்டங்களைப் பாராட்டினார்.

நமது சங்கத்தின் முன்னாள் தலைவர் MJF லயன் E.A.ET.S.செண்பகராஜன் அவர்கள். அனைத்து முன்னாள் முத்தலைவர்கள் சார்பாக ஏற்புரை வழங்கினார். நமது PDG MJF லயன் A.வைப்பிரகாசம் அவர்கள் முதல் தற்போது உள்ள முத்தலைவர்கள் வரை அனைவருடைய சிறப்பான செயல்பாடுகள் மற்றும் அவர்களுடன் தனக்கு ஏற்பட்ட நல்லுறவைப் பற்றிக் கூறினார்.

முன்னாள் முத்தலைவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. நமது சங்கத்தின் ஆறாவது மாத இதழ் வெளியிடப்பட்டது. அன்றைய சேவைகளாக கல்வி உதவித்தொகை, இரண்டு காது கேட்கும் கருவிகள், 6 அரிசிப் பைகள், 4 சேர்கள், 5 டியூப் லைட்டுகள், சைக்கிள், மத்திய சேனை பஸ் ஸ்டாப் டைல்ஸ் புதுப்பிக்க காசோலை மற்றும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

டிசம்பர் மாதம் பிறந்தநாள் கொண்டாடுபவர்கள் கேக் வெட்டி கொண்டாடினார்கள். அவர்களுக்கு லயன் தேவி நித்தியபாண்டி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

Tail twister விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. MJF லயன் P.வினோத்கண்ணா, லயன் சரண்யா தேவி வினோத்கண்ணா Early Bird award-ஐ கொடுத்தார்கள்.

பொருளாளரின் நன்றியுரை மற்றும் தேசிய கீதத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது. Master of Ceremony-யாக லயன் சர்மிளி ரவீந்திரனும், லயன் ராஜராஜேஸ்வரி விக்னேஷ் குமாரும் சிறப்பாக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்கள்.













## *Honouring Our PST's*





*Touch the Heart by Service*

## லயன் K.R.முத்தையா PMJF அவர்கள்

**(324 கூட்டு மாவட்ட சேர்மன்)**



லயன் K.R.முத்தையா PMJF அவர்கள் பாரி மலைச்சாரலிலே தென்றலோடு தமிழும் ஆன்மீகமும் தவழும் வேந்தன்பட்டியில் பிறந்தவர். ஈரோடு மாநகரில் முன்னனி leather business-ன் உரிமையாளர். 1994-ல் தன்னை அரிமா பேரியக்கத்தில் இணைத்துக் கொண்டார். ஈரோடு யூனிக் லயன்ஸ் சங்கத்தின் வழியாக 30 ஆண்டு கால இடைவிடாத பயணமாக பல பதவிகளை வகித்து, பல சாதனைகள் புரிந்து பல விருதுகளைப் பெற்றிருக்கிறார். இந்த ஆறு மாதத்தில் 324 கூட்டு மாவட்டத்தில் 320 புதிய MJF-களை உருவாக்கி LCIF-க்கு U$ 3.20,000 டாலர் வழங்கியுள்ளார்.

பெண்மையைப் போற்றும் வண்ணம் தனது மனைவி லயன் சாந்தி முத்தையாவையும் சிறந்த வட்டாரத் தலைவர் சிறந்த மண்டலத் தலைவராக விளங்க துணை நின்றவர். இளம் அரிமா விஸ்வநாத் மாவட்ட பயிற்றுனராய் வலம் வருகிறார். மருமகள் அழகம்மை மாவட்ட வலைத்தளத்தை வடிவமைத்து நிர்வகித்து வருகிறார்.

**நமது சங்கத்தைப் பற்றி அவர்கள் கூறியது :** சங்கத்தின் வேர்களைப் பாராட்டும் விழாவிற்கு வந்தமைக்கு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். உங்கள் சங்க உறுப்பினர்களின் உபசரிப்பு மற்றும் செயல்பாடுகளைக் கண்டு வியந்தேன். லயன்ஸ் பள்ளியின் அமைப்பும், பராமரிப்பும் மிகச் சிறப்பாக இருந்தது. பள்ளியின் கல்வி கல்வித் தரம் மிகச் சிறப்பாக இருப்பதால் தான் உங்கள் குழந்தைகள், பேரக் குழந்தைகளை அங்கேயே படிக்க வைக்கின்றீர்கள். மிகவும் அற்புதமான ஒரு பள்ளியை நடந்துவதற்காக தற்போதைய தாளாளர் லயன் J.ரமேஷ் குமாரையும், முன்னாள் தாளாளர்கள் அனைவருக்கும். வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவகாசி அரசு மருத்துவமனையில் திரும்பும் திசையெல்லாம் உங்கள் சங்கத் தலைவர்கள் செய்த சேவைத்

திட்டங்கள் தான், அது அரசு மருத்துவமனையா இல்லை லயன்ஸ் மருத்துவமனையா என்று வியக்கும் அளவிற்கு இருந்தது. உங்கள் உறுப்பினர் லயன் Dr.அய்யனார் அவர்கள் அரசு மருத்துவமனைக்கு என்ன தேவையோ அதைப்பார்த்து பார்தது சரியாகச் செய்து கொடுத்துள்ளார்கள். அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

உங்கள் சங்கம் 62 ஆண்டு தாண்டி 63-வது ஆண்டில் இவ்வளவு வெற்றிகரமாக செயல்படுகிறது என்றால் அதற்கு தலைவர், செயலாளர், பொருளாளர் தான் காரணம் என்றால் மிகையில்லை. நான் ஆளுநராக இருந்த போது எனக்கு கிடைத்த வெற்றியெல்லாம் அனைத்து சங்கத்தின் முத்தலைவர்கள் சேவைகளால் தான். எனக்கு அதில் கிடைத்த மகிழ்ச்சியை விட, நான் தலைவராக இருந்த போது 9000 அரசு பள்ளிக் குழந்தைகளுக்கு கண் பரிசோதனை செய்து 493 குழந்தைகளுக்கு கண் கண்ணாடி வழங்கினேன், அது தான் எனக்குப் பெருமையாக இருந்தது. ஒரு பையனுக்கு கண் பார்வை மிகவும் குறைவாக இருந்தது, ஆசிரியர் போர்டில் எழுதியிருப்பது கூட தெரியல்லை, அந்த பையனுக்கு கண் கண்ணாடி கொடுத்தது பார்வையை தெளிவாக்கியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியான தருணமாக இருந்தது.

சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளராக நீங்கள் செய்யும் சேவை அற்புதமான சேவை தான் சிறந்த சேவை. வட்டாரத் தலைவர், மண்டலத் தலைவர் என்று பல பதவிகள் வகிக்கும் போது உங்கள் பொறுப்பில் உள்ள சங்கங்களை நீங்கள் வழி நடத்த தான் முடியும். ஆத்மார்த்தமாக நீங்கள் பணியாற்ற வேண்டுமானால் இந்த முத்தலைவர்கள் பொறுப்பு தான் நிறைவைத் தரும்.

மகளிர்கள் வடிவமைத்த சங்க இதழுக்கு தனித்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த இதழ் மூலம் உங்கள் சங்கம் பற்றி நீங்கள் அறிந்து கொள்ளலாம். 225 உறுப்பினர்கள் இருக்கும் உங்கள் சங்கத்தில் ஒரு சேவைத் திட்டம் செய்யும் போது 50 உறுப்பினர்களுக்கு மட்டும் தான்

தெரியும் மீதமுள்ள 175 உறுப்பினர்களுக்கு உங்கள் சங்க இதழ் வழியாகத்தான் தெரியும். அதை வரவேற்பறையில் வைக்கும் போது உங்கள் நண்பர்களுக்கு நீங்கள் இணைந்திருக்கும் இந்த உயரிய சங்கம் பற்றி தெரிந்து அதில் சேர ஊக்கமளிக்கும்.

லயன் தீபா அருண்குமார் தன் கல்லூரியில் பயிலும் மாணவிகளை அழைத்துக் கொண்டு NSS முகாமில், ஒரு கிராமத்தில் ஒரு வாரம் தங்கி அங்கு வசிக்கும் பெண்களுக்கு சுயதொழில் செய்ய பயிற்சியளிப்பது மற்றும் கிராமத்தை சுத்தப்படுத்துவது என்று செய்யும் சேவை மிகவும் பாராட்டுக்குரியது.

மிக அற்புதமாக பயணித்துக் கொண்டிருக்கும் அனைத்து உறுப்பினர்களின் பணி மென்மேலும் வளர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.



லயன்ஸ் பள்ளி



அரசு மருத்துவமனை







**NSS முகாம்**

# பொதுக்குழுக் கூட்டம் (ஜனவரி)

**லயன் G.முத்துக்குமரன்**



2024-ஆம் ஆண்டு புத்தாண்டின் விடியலுக்கு பின் நமது சங்கத்தின் முதல் பொதுக்குழுக் கூட்டம் 10.01.2024 அன்று மாலை 7.25 மணிக்கு தொடங்கியது. Tail Twister லயன் ரேணுகாதேவி முத்துக்குமரனின் எளிமையான விளையாட்டுடன் கூட்டம் ஆரம்பமானது.

முதன்மை விருந்தினர் திரு.K.செந்தில்குமார் அவர்களை லயன் A.M.குணசேகரன் அவர்கள் மேடைக்கு அழைத்து வந்தார். கொடி வணக்கத்தை லயன் சாவித்திரி தேவி குருசாமியும், அரிமா பிரார்த்தனையை லயன் தீபா அருண்குமாரும் வாசித்தார்கள். உலக அமைதிக்காக ஒரு நிமிடம் மௌனம் கடைபிடிக்கப்பட்டது.

தலைவர் லயன் K.பிரபாகர் அவர்கள் வரவேற்புரையாற்றினார். செயலாளர் லயன் P.நித்தியபாண்டி செயலாளர் அறிக்கையை வாசித்தார். முதன்மை விருந்தினரை லயன் கருணைமணி இன்பசாகரன் சபைக்கு சிறப்பாக அறிமுகம் செய்து வைத்தார்.

திரு.K.செந்தில்குமார் (Trustee, Sivakasi Green forum & director, Lovely offset printers) 2019-ல் ஆரம்பித்த பசுமை மன்றத்தின் முன் முயற்சிகளை நம்முடன் பகிர்ந்து கொண்டார். மதிப்புமிக்க தகவல்களை வழங்கியது மட்டுமல்லாமல் சிவகாசியின் நீர்வளம், பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்கி செயல்பட நமது குழந்தைகளுக்கும் நீர்வளத்தை பாதுகாக்கும் முறைகளைச் சொல்லிக்கொடுத்து செயல்திட்டங்களில் ஈடுபடுத்த வேண்டும் என்றார்.

இந்த பசுமை மன்றத்தின் முக்கிய உறுப்பினர் திரு.சுரேஷ் தர்கர் (நமது லயன்ஸ் பள்ளியின் முதல் பேட்ச் மாணவர்களில் ஒருவர்) அவர்களும், நமது சங்க உறுப்பினர்களை இந்த பசுமை மன்றத்தின் செயல்திட்டத்தில் உற்சாகமாக ஈடுபட்டு பங்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

07.01.2024 அன்று நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமைப் பற்றி லயன் T.இம்பாலா அவர்கள் கூறினார். லயன் தீபா அருண்குமார் உறுப்பினர்களின் பிறந்த நாள் மற்றும் திருமண நாளுக்கு வாழ்த்துக்கள் கூற, அவர்கள் கேக் வெட்டி கொண்டாடினார்கள்.

லயன் கோதை செந்தில் வேலவன் லதா என்ற பெண்ணிற்கு அரிசிப்பை வழங்கினார். Tail Twister விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. Early bird award-ஐ லயன் செந்தில் வேலவன் மற்றும் லயன் கோதை செந்தில் வேலவன் கொடுத்தார்கள்.

பொருளாளர் லயன் P.சுதாகரன் நன்றியுரை கூறினார். தேசிய கீதம் மற்றும் இரவு உணவுடன் கூட்டம் இனிமையாக நிறைவு பெற்றது.



# மாபெரும் இலவச மருத்துவ முகாம்

***Lion S.N.N.Sivapiran***



லயன்ஸ் கிளப் ஆப் சிவகாசி, சிவகாசி மாநகராட்சி, ம.புதுப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம், மதுரை குரு மருத்துவமனை, அனிஷ் கருத்தரிப்பு மற்றும் மகளிர் நல சிறப்பு மையம் இணைந்து நடத்திய மாபெரும் இலவச பொது மருத்துவம், கண், பல், குழந்தைகளுக்கான சிறப்பு பரிசோதனை, புற்று நோய் மற்றும் இருதய பரிசோதனை மற்றும் குழந்தையின்மை, மகளிர் நல சிறப்பு முகாம் 07.01.2024, ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை சிறப்பாக நடைபெற்றது.

முகாமினை சிவகாசி மாநகராட்சி மேயர் மேதகு சங்கீதா இன்பம் அவர்கள் துவக்கி வைத்தார்கள். உடன் துணை மேயர் திருமதி.விக்னேஷ் பிரியா காளிராஜன், BMO (Block medical officer) டாக்டர் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

**முகாமில் நடைபெற்ற மருத்துவம் :**

1. பொது மருத்துவம்
2. பல் மருத்துவம்
3. சித்த மருத்துவம்
4. இதய நோய் மருத்துவம்
5. குழந்தையின்மை மருத்துவம்
6. பெண்கள் நலம் மருத்துவம்
7. குழந்தைகள் நல மருத்துவம்
8. புற்று நோய் மருத்துவம்

**முகாமின் சிறப்புகள் :**

1. டிஜிட்டல் எக்ஸ்ரே வசதியுடன் பேருந்து
2. இ.சி.ஜி. எக்மோ, பாப்ஸ்மியர் ஸ்கேன், மாமோகிரம் ஸ்கேன் வசதியுடன் மருந்தகம்.
3. இரத்தம், சளி, நீர், மலம் பரிசோதனை ஆய்வகம்.
4. இலவச மருந்தகம்.
5. கர்ப்பப்பை கண்டறியும் ஸ்கேன்.

**முகாமில் பயன்பெற்றவர்கள் :**

| | |
|---|---|
| கலந்து கொண்டவர்கள் | - 225 பேர் |
| ECG பயனாளர்கள் | - 46 பேர் |
| ECHO பயனாளர்கள் | - 26 பேர் |
| டிஜிட்டல் எக்ஸ்ரே பயனாளர்கள் | - 45 பேர் |
| ஆய்வகம் பயனாளர்கள் | - 76 பேர் |
| மாமோக்ராம் பயனாளர்கள் | - 6 பேர் |

பயனாளர்கள் தங்களது பதிவுகள் முடித்து பதிவு எண் மற்றும் பதிவு அட்டையுடன் தங்களது உயரம், எடை, பிரஷர் மற்றும் சுகர் பரிசோதனை செய்து பின்னர் தங்களுக்கு தேவையான பிரிவில் மருத்துவர்களிடம் ஆலோசனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். மருத்துவர்களின் பரிசோதனைக்கு பின் தேவையான மற்ற ஆய்வகப் பரிசோதனைகள் செய்யப்பெற்று அதற்குண்டான மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டது.

இருதய நோய், புற்று நோய், HIV, T.B. ஆய்வகப் பரிசோதனை முடிந்து மருத்துவர்களின் ஆலோசனை பெற இரு நாட்கள் ஆகும் என்பதால் மருத்துவர்களே பயனாளிகளின் எண்ணில் தொடர்பு கொண்டு அவர்களுக்கு மேல் மருத்துவத்திற்கு ஆலோசனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

முகாமில் நமது தலைவர் லயன் K.பிரபாகர், செயலாளர் லயன் P.நித்தியப்பாண்டி, பொருளாளர் லயன் P.சுதாகரன், இணைச்செயலாளர் லயன் K.முரளிராஜ், இணைப் பொருளாளர் லயன் அருண்குமார், லயன் முருகையன், லயன் தீபா சுதாகரன் ஆகியோர்கள் ஆரம்பம் முதல் வந்திருந்து நிறைவு செய்து கொடுத்தது பாராட்டக்கூடியது.

முகாம் ஒருங்கிணைப்பாளர்கள் முன்னாள் தலைவர் லயன் S.N.N.சிவபிரான் மற்றும் லயன் T.இம்பாலா சிறப்பாக செய்திருந்தார்கள். பரிசோதனைக்காக வந்திருந்த கர்ப்பிணிப் பெண்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

மனதிற்கு நிறைவான மக்களுக்கு பயனான
மகத்தானதோர் மருத்துவ முகாம்.

நன்றி!


LIONS CLUB
பதிவு
செய்யும்
இடம்


MOBILE CANCER
SCREENING UNIT
LADIES FORUM - MADURAI
MOBILE CANCER SCREENING UNIT
LIONS CLUB




ஸ்கேன் வசதியுடன்
பேருந்து




LIONS CLUB OF

## *Sivakasi Green Forum* (பசுமை மன்றம்)
## இயற்கையையும் அதன் படைப்புகளையும் நேசிக்கும் மன்றம்



திரு.K.செந்தில்குமார்
(Trustee, Sivakasi Green Forum & Director Lovely Offset Printers)

நமது சுற்றுச்சூழலைப் புதுப்பிக்கும் முயற்சியில் சிவகாசி பசுமை மன்றத்தின் (SGF) குறிப்பிடத்தக்க சாதனைகளைப் பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். எங்களின் ஒருங்கிணைந்த முயற்சிகள் சிவகாசியை குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு வழிவகுத்து, குளிர்ச்சியாகவும் பசுமையாகவும் மாற்றியுள்ளது.

**நீர் நிலைகளின் மறுசீரமைப்பு :** நீர்நிலைகளை மீட்டெடுப்பது என்பது எங்களின் முயற்சியாகும். இந்த முயற்சியானது நீர்வாழ் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு புத்துயிர் அளிப்பதோடு மட்டுமல்லாமல், சிவகாசி மற்றும் அருகில் உள்ள ஊர்களில் நிலத்தடி நீரை கணிசமாக விரிவுபடுத்தியுள்ளது.

**தண்ணீர் பற்றாக்குறை குறைப்பு :** ஒரு காலத்தில் நமது ஊரில் தண்ணீர் பற்றாக்குறை என்பது மிகப்பெரிய பிரச்சனையாக இருந்தது. 2019-ல் செயலில் இருந்த எட்டு ரிக்கிங் இயந்திரங்களின் தற்போது மூன்று மட்டும் தான் உள்ளது. இது நமது நிலத்தடி நீர் உயர்ந்ததற்கு சான்றாகும். 18 மீட்டரா இருந்த ரிக்கிங்கிற்குத் தேவையான ஆழம் தற்போது 5 மீட்டருக்கும் குறைவாகக் குறைந்துள்ளது.

நமது நீர் பாதுகாப்பு முயற்சிகள் கணிசமான பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தியது. 2019-ல் தினசரி தண்ணீருக்காக நமது ஊர் 5 லட்சம் ரூபாய் செலவிட்டது, ஒரு வருடத்திற்கு மொத்தம் 200 கோடி. தற்போது தினசரி 50,000 ரூபாய் செலவிடுகிறது.

**மியாவாக்கி :** எங்கள் முயற்சியின் மற்றொரு தூண் மியாவாக்கி முறையில் குறுகிய இடத்தில் அடர்வனங்களை உருவாக்குதல், வழக்கமான காடுகள் உருவாகுவதைவிட பத்துமடங்கு வேகமாக மியாவாக்கி காடுகளை உருவாக்க முடியும். இதனால் பசுமையை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், உள்ளூர் காலநிலை

மேம்பாட்டிற்கும் பங்களிக்கிறது, இது மழைப்பொழிவை அதிகரிக்கும்.

சிவகாசியின் முக்கிய நீர்த்தேக்கமாக பெரியகுளம் கண்மாய் உள்ளது. சிவகாசி ஸ்ரீவில்லிபுத்தூர் சாலையில் 42 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. 2000-ல் நிலத்தடி நீர் மட்டம் 600 அடியாகக் குறைந்தது. பெரியகுளத்தின் நடுவில் 7500 சதுர அடியில் 2000 மரங்கள் நடப்பட்டது. குளத்திற்குச் செல்லும் நீர்வழிகளான செங்குளம், வண்ணான் குளம், ஆணையூர் கண்மாய் அனைத்தும் தூர்வாரப்பட்டது. மழையால் குளத்தில் நீர்வரத்து அதிகமானது, புதிதாக 32 வகையான பறவைகளும் வருகின்றன. ஒரு சுற்றுலாத்தலம் போல் உள்ளது. இங்குள்ள படித்துறையில் குடும்பத்தோடு அமர்ந்து மியாவாக்கி காடுகளை ரசிக்கலாம்,

2022-23-ல் சின்னக்குளத்தின் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியில் கரையை உருவாக்கி பலப்படுத்தினோம், 2023-ல் பெய்த மழையில் இந்தக்குளம் அதன் முழு கொள்ளளவை எட்டியது. மேலும் 2021 முதல் நமது நீர்நிலைகள் இரண்டாவது முறையாக நிரம்பியுள்ளது. நமது முயற்சிக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

**எதிர்கால இலக்குகள் :** எங்களின் முன்முயற்சிகளை விரிவுபடுத்துவதை எங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

1. நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை செயல்படுத்துதல்.

2. நிலையான நீர் பயன்பாடு மற்றும் நீர் பாதுகாப்பு குறித்து கல்விப் பட்டறைகளை நடத்துதல்.

3. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு உள்ளூர் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுடன் கூட்டு சேர்த்தல்.

சுற்றுச்சூழல் மறுசீரமைப்பின் இந்தப் பாதையில் நாம் தொடர்ந்து பயணிக்கும் போது ஒவ்வொரு சிறிய அடியும் ஒரு பெரிய மாற்றத்திற்கு வழி செய்கிறது என்பதை நினைவில்

கொள்வோம். ஒத்துழைப்பின் சக்தியை நாங்கள் அங்கீகரித்து, தனியார் நிறுவனங்கள், அரசு அமைப்புகளின் பங்கேற்பை ஆர்வத்துடன் அழைக்கின்றோம். எங்களுடன் மரம் நடும் இயக்கத்தில் சேருங்கள். மரங்களுக்கு ஸ்பான்சர்களும், தோட்டங்களுக்கு இடங்களை வழங்கத் தயாராக உள்ளவர்களும் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். பசுமையான மற்றும் ஆரோக்கியமான சூழலின் வளர்ச்சிக்கு பங்களியுங்கள்.









# *Lion Star*

**Lions club's stars brighten the health care with generosity**




In our town, there are shining stars that go beyond just twinkling in the sky. They are our lions club stars our club members donated the life saving medical equipments ensuring our local hospital is well equipped to care for public.

They team up with the dedicated Doctor lion Dr.Ayyanar in the government hospital who is our club member from 2003. His tireless efforts in strengthening our hospital facilities through the club deserve commendation. By combining his medical expertise with the altruistic spirit of lions club, he is truly making a positive impact on our community health. He is a beacon of inspiration to all of us .




Together the doctor and our member create a constellation of care, illuminating path of better health for our community.

## COVER STORY

### சுகாதார அமைப்பை வலுப்படுத்தல்



Dr.T.அய்யனார் M.B.B.S., D.C.H.,

சுகாதாரச் சேவைகளை மேம்படுத்துவதற்காக நமது சங்கத்தின் அர்ப்பணிப்பு பொது மக்களின் நல்வாழ்வுக்கான அவர்களின் பங்களிப்பை பிரதிபலிக்கிறது.

1998-ல் நமது லயன்ஸ் சங்கம் உட்பட சிவகாசியில் உள்ள பிற 4 லயன்ஸ் சங்கங்கள் இணைந்து Baby warmer வழங்கினார்கள். அதன் பிறகு நமது சங்கம், பல உயிர்காக்கும் மருத்துவ உபகரணங்களை வழங்கியது.

சங்க உறுப்பினர்கள் PDG லயன் A.வைரப்பிரகாசம் MJF லயன் A.P.செல்வராஜன் MJF, லயன் S.ஸ்ரீராம் அசோக் MJF, லயன் V.அய்யன் கோடீஸ்வரன், லயன் K.ஜெயசங்கர் மற்றும் சங்கத்தின் அனைத்து தலைவர்களின் முயற்சியால் அரசு மருத்துவமனையின் சிகிச்சைகள் மற்றும் வசதிகள் மேம்படுத்தப்படுகிறது.

அரசு மருத்துவமனையில் x-ray இயந்திரம் மட்டும் இருந்தது. அதில் ஒரு நாளைக்கு 40 x-ray வரை எடுப்போம். அந்த x-ray-யை டெவலப் செய்து முடிவுகள் தெரிந்து சிகிச்சை எடுப்பதற்கு ஒரு நாள் ஆகிவிடும். நோயாளிகள் இரண்டு மூன்று நாட்கள் மருத்துவ மனைக்கு வந்து செல்ல வேண்டியிருந்தது. லயன்ஸ் சங்கம் C.R. X-ray (Computerised x-ray) வழங்கியதன் மூலம் பரிசோதனையின் முடிவு 10 நிமிடத்தில் தெரிந்து நோயாளிகள் உடனே சிகிச்சை பெற மாபெரும் உதவியாக இருக்கின்றது.


இந்த C.R. X-ray-யை லயன் A.P.செல்வராஜன் PMJF அவர்கள் வழங்கினார்கள். சிவகாசியில் உள்ள பொது மக்கள் பரிசோதனை மற்றும் சிகிச்சைக்காக வெளியூர் செல்லாமல் இருக்க நமது அரசு மருத்துவமனைக்கு என்னென்ன இயந்திரங்கள் வேண்டுமோ அத்தனையையும் சொல்லுங்கள்


அதையும் செய்து கொடுக்கின்றேன் என்று பெருந்தன்மையாகக் கூறினார். அன்று முதல் இன்று வரை பல உயிர்காக்கும் மருத்துவ உபகரணங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். அதுவும் துல்லியமாக முடிவுகளைத் தெரியப்படுத்தும் அமெரிக்கா, ஜெர்மன் கம்பெனி, இயந்திரங்களை வாங்கிக் கொடுப்பார்.

குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகள் மேல் சிகிச்சைக்காக விருதுநகர் மற்றும் தனியார் மருத்துவமனைக்கு செல்ல வேண்டி இருந்தது. தற்போது அதி நவீன ICU ward baby monitor மூலம் அவர்கள் இங்கேயே சிகிச்சை பெற்று பயனடைகின்றார்கள். கொரோனா காலக்கட்டத்தில் நமது சங்கம் வழங்கிய பல உபகரணங்களால் பொது மக்கள் பயன் பெற்று இறப்பு விகிதம் குறைக்கப்பட்டது.

ICU Ward, Baby ICU Ward, Defibrillators, laprascopic instruments, Blood Components separation Unit, Endoscopy baby Warmer, liquid oxygen plant, waste segregation plant, double side phototheraphy. a/c with false Ceiling, Blood Storage, D.Freezer, என்று பல உயிர்காக்கும் உபகரணங்கள் நமது சங்கத்தால் வழங்கப்பட்டது. நுண்ணுயிர் உரக்குடில் மூலம் மக்கும் குப்பைகளை அதில் போட்டு உரமாக மாற்றுகின்றோம்.


Blood Storage


Baby ICU Ward


ICU Ward


நுண்ணுயிர் உரக்குடில்

# Unveiling Lions School Activities



**Academics :**

In Unified English Olympiad Examination 2023 Jana Veera Raman Pon and Yubhashana S, Aloysious Kewin Britto JV, Hrithikesh K, Anishk R of Std IV in the Junior School ranked 3rd, 10th, 14th, 17th and 19th in National Level respectively.

**Sports Achievements :**

Dharanya Sagar.S won the II place in Singles & Doubles U - 10(B) category in the District Level Badminton tournament.

Hardeep Sankar BV of SKG won the I place in Rink I and II place in Rink II U - 6 (B) category, Dheena Ratchagan R of Std IV won the I place in Rink I and II place in Rank III U - 10 ( B ) category in the State Level Open Skating Championship. In the Times NIE Vista Ideathon event 2023-24 was conducted by Times of India our school students were selected for the second round on 04.01.2024.

In the State level MEPCO- RADIX Chess championship , H Jiya Harshitha & N Gayathri of Std VII got II place in Junior category. P Sujit & A Prakash Raj of std IX got I place in Senior category. In the State level MEPCO- RADIX Badminton tournament, R Kishore & M Hrithick Manikkam of Std IX got I place in Senior category. V Lakshana Sini & P S Saihrishmitha Sri of std IX got II place in Senior category. In the State level MEPCO-RADIX Basketball tournament our school team got II place in Senior boys category.

MEPCO-RADIX Junior Level competitions our students got prizes in Model Presentation,Samayamum Tamilum, Puthiyathor Ulagu Seivom," Anbudaimai "Tamil Elocution competition, Women Empowerment," Road to Success" English Elocution competition, Tamil Essay Writing competition, English Essay Writing Competition, Drawing competition, Drawing competition, Painting competition, Puzzle Solving competition, Model presentation, connection competition.

**Functions :**

Pongal Celebration was held in the Play school on Friday, 12th January 2024. Pre KG Kidsd ressed up in traditional attire and had sweet Pongal. They played some traditional games such as kolattam, tug of war and uriyadi in the presence of Primary Incharge Mrs B Mercy and their teachers.

Sports day was celebrated in a grand manner on 13.01.2024. Mr K K Vejay Arunn BE (1996 1997 Batch SPL) was the Chief Guest.

**Others :**

44 Students of Std XI and 5 teachers along with Principal went on an educational trip to ISRO, Bangalore. 139 Students of Std VIII & IX and 11 teachers along with Principal went on a tour to Mysore, Wonderla from 23.12.2023 to 26.12.2023.

Career guidance programme was conducted for std XII students on 27.12.2023, Mr R Jacob Senthilkumar (Academic Counsellor), Mr J Steyns Spurgeon (Career Development Counsellor) Jeyanthinather Academy of Marine Studies (JAMS), Tuticorin was the Chief Guests.

128 Students of Std VI & VII and 13 teachers along with Principal went on a tour to Cochin, Wonderla from 28.12.2023 to 31.12.2023.

Road Safety Awareness meeting was organised by DEO Pvt Schools, Virudhunagar at KVS English School, Soolakarai .Transport Incharge, Drivers and Conductors. Our school Drivers Mr C Kumar Pandi, Mr S Raja Gopal, Mr S Gangadhaarn, Mr A Kalirajan attended the meeting. DEO sent the appreciation certificate to all of them.

The Open Day for the parents of Std I to V in the junior school was conducted on Saturday, 6th January 2024. Ms Mary Preetha Idhyakumar, Education Solutions Trainer took a demo session on the topic “Professional Development Program” for View Sonic Panel to the KG Teachers on Wednesday, 10th January 2024.

*Mr.M.G.PANDIAN M.A., M.Ed., M.Phil.,*
*Principal,*
*The Sivakasi Lions Mat.Hr.Sec.School.*

# EDUCATIONAL TRIP










*Touch the Heart by Service*

# SPORTS DAY EVENT

The Sports Day Event at Lions School was a spectacular showcase of athletic excellence, team work and school spirit. It was the day where the entire school Community Came together to celebrate the importance of physical fitness. The chief guest was Lion K.K.Vejay Arunn who is our club's new member and distinguished alumnus who served as the school captain in '96 - '97. Lion Chella Nivya Vejay Arunn gave the medals and trophies to the students. Correspondent Lion J.Ramesh Kumar and President Lion K. Prabakar addressed the gathering.













# *A Birthday Blessing*

அன்பு நிலைபெற!
ஆசை நிறைவேற!
இன்பம் நிறைந்தாட!
ஈடில்லா இந்நாளில்!
உள்ளத்தில் குழந்தையாய்!
ஊக்கத்தில் இளமையாய்!
எண்ணத்தில் இனிமையாய்!
ஏற்றத்தில் பெருமையாய்!
ஐயம் நீங்கி!
ஒற்றுமை காத்து!
ஓர் நூறாண்டு!
ஔவை வழி கண்டு!
நீங்கள் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.

## Birthday movie emoji quiz

| | |
|---|---|
| 1 | Liar Liar |
| 2 | Wine Country |
| 3 | Sixteen Candles |
| 4 | Happy Birthday |
| 5 | Sleeping Beauty |
| 6 | Frozen fever |
| 7 | Princess Diaries |
| 8 | Stardust |
| 9 | Harry Potter and philosopher's stone |
| 10 | Willy Wonka Chocolate Factory |
| 11 | Toy Story |
| 12 | The celebration |
| 13 | Dumbo |
| 14 | The Birds |
| 15 | Thirteen going on Thirty |
| 16 | Bloody Birthday |
| 17 | Birthday Girl |


Lion N.Suresh Chandar
02.01.1987


Lion Manimegalai Vasiappan
03.01.1968


Lion S.Vairaprakasam
03.01.1972


Lion S.K.Arumugasamy
07.01.1973


Lion M.S.Karpagaraj
10.01.1974


Lion K.Ambulirajan
11.01.1954


Lion Meenakshi Vithyatharan
11.01.1963


Lion Subathra Paramanandham
11.01.1963


Lion A.Kumaravel MJF
16.01.1957


Lion AMSG.Ashokan MJF
18.01.1959


Lion Chitralekha Kanagasabai
20.01.1948


Lion Murugeswari Ravirajan
20.01.1968



Lion Dr.S.Ramesh
25.01.1962



Lion T.Impalaa
26.01.1973



Lion Thirumagal Ashok Kumar
28.01.1962



Lion P.Arun Prasanna
31.01.1983

## திருமண நாள் வாழ்த்துக்கள்...

இன்பத்தில் இணைந்து துன்பத்தில் தோள் கொடுத்து
கடமையில் கண்ணாயிருந்து
பிடிவாத குணங்களில் விட்டு கொடுத்து
உறவுகளுடன் ஒன்றாக கலந்து
தாம்பத்திய வாழ்க்கைக்கான அர்த்ததை உணர்ந்து
மொத்தத்தில் குடும்பம் என்ற ஒன்றில் சங்கமம் ஆகி
சிரிப்போடும் சிறப்போடும் வாழ்ந்து கொண்டிருக்கும்
நமது லயன்ஸ் தம்பதிகளுக்கு
இனிய திருமண நாள் நல்வாழ்த்துக்கள்!

| | |
|---|---|
| 1. லயன் N.கனகசபேசன் – சங்கரிபாலா | 20.01.1983 |
| 2. லயன் Dr.S.மதன் – வித்யாலட்சுமி | 20.01.2008 |
| 3. லயன் K.அம்புலிராஜன் – உமாசெல்வி | 22.01.1986 |
| 4. லயன் EAET.S.செண்பகராஜன் – ஸ்ரீதேவி | 27.01.1983 |
| 5. லயன் A.குமரவேல் – உஷா | 27.01.1983 |
| 6. லயன் A.சரவணகுமார் – பவளமீனா | 28.01.2007 |
| 7. லயன் S.விஜயகுமார் – கோகிலா | 29.01.1978 |
| 8. லயன் ரவிகுமரன் – சித்ரா தேவி | 19.01.1997 |





*Lion Deepa Arunkumar*
*Greeter Committee Chairperson 2023-24*



# வாழ்த்து பகுதி



இதயம் நிறை அன்பு கொண்ட இதழாசிரியர் லயன்.தீபலட்சுமி சுதாகரன் அவர்களுக்கு நாகர்கோவில் பிடிஜி லயன் டாக்டர் எஸ்.ஆர்-ன் வணக்கம்.

தங்கள் சங்க ஆறாவது இதழ் படித்து நிறைய தெரிந்து கொண்டேன். அட்டைப்பட சேவைகள் இதயத்தை இதமாக்கின. விளக்கம் மனதை மகிழ்வாக்கியது.

சிவகாசி சங்க முன்னாள் முத்தலைவர்கள் இந்த அளவிற்கு இதழ் மூலம் பெருமைப்படுத்துகிறீர்கள். தனிப்பாராட்டுக்கள். சங்க பட்டய உறுப்பினர்கள், சங்க வரலாறு என ஆண்டுதோறும் காணக் கிடைக்கும் வாய்ப்பினை பெருமையாக கொள்கின்றேன்.

Gestational Diabetes millits அனைவரும் புரிந்திருக்க வேண்டிய பயனுள்ள படைப்பு புண்ணியத்தை சேர்த்து வைக்க ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் கட்டுரையில் டாக்டர்.யோகேஸ்வரன் அருமையாக சொல்லியுள்ளார். மிக மிக சிறப்பாக Ladies Night celebration நடத்தப் போகிறீர்கள் என்பதனை program பறைசாற்றுகின்றது. மாரத்தான் பற்றி அதுவும் பிலிப்பிடீசு சிலை வரலாறு உட்பட சூப்பர் தகவல்... இன்னொரு தனிப்பாராட்டுக்கள்.

நவம்பர் இரண்டாம் பொதுக்குழு கூட்டத்தை லயன் சரண்யாவும் டிசம்பர் முதல் கூட்டத்தை லயன் பவானியும் நிகழ்வுகள் நீங்காமல் தந்துள்ளனர். மாவட்ட, கூட்டுமாவட்ட ஆல் இந்தியா கவுன்சில், உலக லயன்ஸ செய்திகள் என ஒரு லயன்ஸ் இதழுக்குரிய தகுதிகளோடு தந்துள்ளீர்கள்.

நாம் அனைவரும் அடுத்தவர்களுக்காகவே வாழ்கிறோம் என அருமையாக உங்கள் தலையங்கத்தில் சொல்லியுள்ளீர்கள். மகிழ்ச்சி, செழிப்பு - Balance sheet போல வெளி வரட்டும் என பொருளாளர் சுதாகரன், பொருளாளர் பாணியில் வாழ்த்தியுள்ள விதம் நயம்.

புகைப்படங்கள் செயல்பாடுகளை கண்முன்னே காட்சி படுத்துகின்றன. அதைவிட அருமையாக பட்டியலிட்டு காட்டுகின்றார் செயலர் நித்தியபாண்டி, தலைவர் K.பிரபாகர் தான் ஒரு சாதனை சங்கத்தின் தலைவர் என்பதனை உணர்ந்து எழுதியுள்ளார். நாட்டில் ஜுவல் விலை ஏறிக் கொண்டே செல்கிறது. லயன்ஸ் நாட்டில் உங்கள் சங்க இதழ் ஜீவலும் உங்கள் எடிட்டர்ஷிப்பால் அதன் தரவிலை ஏறிக்கொண்டே போகிறது.

*வாழ்த்துவது வாயல்ல இதயம்*

***Lion PDG.Dr.S.Rajendran.MBBS.,D.Lit.,*** (for Social Service),
நாகர்கோவில்